16th March 1959]

Kalagam-Avadayarkoil road

* 806 *Q.*—Sri R. SRINIVASA IYER: Will the Hon. the Chief Minister be pleased to state when the road from Kalagam to Avadayarkoil in Pattukottai division, Tanjore district—Miles 0 to 2 from Kalagam to Poonakuthikollai—is proposed to be metalled with granite jelly?

The Hon. Sri C. SUBRAMANIAM: The work was included in the Local Development Works Programme but it could not be taken up for execution for want of the District Board's consent to contribute 25 per cent of the cost thereof. By the time the District Board agreed to make the contribution, the allotment for the district had been fully utilised. The work cannot therefore be taken up for execution in the current year. The question of taking it up for execution in the next year is under consideration.

Sri R. SRINIVASA IYER: Sir, this is an important link of only two miles. Will the Government at least take it up in some other programme and link up this two miles of road so that buses may ply from Tanjore to Sellinbarachatram.

The Hon. Sri C. SUBRAMANIAM: If the hon. Member has any useful suggestion to make, he may put it in writing and pass it on to the concerned department.

Oil Producers Co-operatice Society in North Arcot District.

*807 *Q.*—Sri T. S. RAMASWAMY PILLAI (on behalf of Sri M. P. SARATHI): கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் ஒரு எண்ணெ உற்பத்திக் கூட்டுறவு சங்கத்தில் மோசடியாக கடலைப் பற்றுக்குப் பதில் புளியங்கொட்டை முதலியவையுள்ள மூட்டைகள் காட்டப்பட்டது பற்றி புகார் சமீபத்தில் வந்ததா?

(ஆ) அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) The non-official Secretary of the Society, who was responsible for the fraud was made to make good the bags of oilseeds, which he did. He was also removed from Secretaryship.

Sri M. P. SUBRAMANIAM: இந்த எண்ணெ உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு கடன் எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது? அவற்றில் எவ்வளவு திருப்பித் தரப்பட வேண்டியதாக இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon Sri M. BHAKTAVATSALAM: அந்த விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை.

Compulsory Elementary Education.

* 808 *Q.*—Sri A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) அகில இந்திய ஆரம்பக் கல்வி கவுன்சில் சமீபத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் ஆறு முதல் பதினோறு வயதிற்

[16th March 1959

குட்பட்ட சிறுவர்களுக்கு கட்டாயக் கல்வி திட்டத்தை கொண்டுவர வேண்டு மென்று செய்துள்ள சிபாரிசையொட்டி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது ?

(ஆ) இத் திட்டம் எப்போது அமுலுக்கு வரும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) The recommendation of the All-India Council for Elementary Education regarding introduction of compulsory education has been received by Government. This recommendation is in line with the one made by the 'Legislature Committee on the White Paper on Education' to the effect that Education should be made free and compulsory for all children between the ages of six and 11 in all towns and villages of the State by the end of the year 1965-66. A scheme for implementing this recommendation, starting from 1959-60 is being drawn up.

Sir, I think I can answer the next question also.

MR. SPEAKER : Yes.

* 809 Q.—SRI A. VEDARATHNAM (on behalf of SRI P. G. MANICKAM): கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1959-ம் வருஷத்திலே எந்தெந்த அபிவிருத்தி பிளாக்கு களிலே கட்டாய இலவசக் கல்வியானது எலிமெண்டரி பாடசாலைகளிலே அமுலுக்குக் கொண்டுவரப்படும் ?

(ஆ) கட்டாயக் கல்வி சம்பந்தமாக எடுக்கப்படப்போகும் விதி முறை கள் யாவை?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) A detailed scheme for the introduction of free and compulsory education in the first five years of schooling is being worked out in consultation with the Director of Public Instruction. It will be finalised shortly.

SRI A. VEDARATHNAM : நம்முடைய அரசியல் நிர்ணய சட்டத்தின் பிரகாரம் 1960 க்குள்ளாக இந்நாட்டில் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் எல்லோருக்கும் கல்வி அறிவு புகுத்தப்பட வேண்டும் என்று திட்ட மிடப்பட்டிருக்கிறதே அதற்கு என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார் கள். அப்படி சாத்தியம் என்று இந்த அரசாங்கம் நினைக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : சட்டம் செய்வதன் மூலம் அதை அமுல் நடத்துவது எப்படி என்பது தெரிய வந்திருக்கிறது. அப்படி நிறைவேற்ற முடியாது என்ற காரணத்தால் இந்த ஸ்டேட்டை பொறுத்த வரையில் 6 வயது முதற்கொண்டு 11 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கு 1965-66க்குள் பள்ளிக்கூடத்தில் பயிற்சி கொடுக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது, அதன் மூலம் அவர்களுக்கு கல்வி அறிவு புகுத்தப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையையே அகில இந்தியாவும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

SRI K. RAMACHANDRAN : ஏற்கனவே விவாதித்தபோது பஞ்சாயத்து யூனியன் ஏற்பாடு செய்கிற அந்தந்த பகுதிகளில் கட்டாயக் கல்வியை முதன் முதலாக ஆரம்பத்திலிருந்தே புகுத்த முன் வரலாம் என்ற கருத்தை தெரிவிக்கப்பட்டது. அப்படியென்றால் அப்படி புகுத்த